தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2021
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2021**
The Australian Society of Graduate Tamils (ASoGT)

இணைப்பு: 16

# திருக்குறள் போட்டி

## விசேட அதிமேற் பிரிவு (15 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2006க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்

## அதிகாரம் 17 - அழுக்காறாமை

குறள் 161

**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு.**

***இதன்பொருள்*** - *ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்கநெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.*

குறள் 162

**விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லை யார்மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

***இதன்பொருள்*** - *யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.*

குறள் 163

**அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்**
**பேணாது அழுக்கறுப் பான்.**

***இதன்பொருள்*** - *தனக்கு அறமும் ஆக்கமும் விரும்பாதவன் என்று கருதத் தக்கவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.*

குறள் 164

**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து.**

***இதன்பொருள்*** - *பொறாமைப்படுதலாகிய தவறான நெறியில் துன்பம் ஏற்படுதலை அறிந்து, பொறாமை காரணமாக அறமல்லாதவைகளைச் செய்யார் அறிவுடையோர்.*

குறள் 165

**அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடுஈன் பது.**

***இதன்பொருள்*** - *பொறாமை உடையவர்க்கு வேறு பகை வேண்டா. அஃது ஒன்றே போதும், பகைவர் தீங்குசெய்யத் தவறினாலும் தவறாமல் கேட்டைத் தருவது அது.*

குறள் 166

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்.**

***இதன்பொருள்*** *- பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.*

குறள் 167

**அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.**

***இதன்பொருள்*** *- பொறாமை உடையவனைத் திருமகள் கண்டு பொறாமைப்பட்டுத் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி நீங்கி விடுவாள்.*

குறள 168

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.**

***இதன்பொருள்*** *- பொறாமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்துத் தீய வழியில் அவனைச் செலுத்திவிடும்.*

குறள 169

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.**

***இதன்பொருள்*** *- பொறாமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத் தக்கவை.*

குறள் 170

**அழுக்கற்று அகன்றாரும் இல்லை:அ.்.து இல்லார்**
**பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.**

***இதன்பொருள்*** *- பொறாமைப்பட்டுப் பெருமையுற்றவரும் உலகத்தில் இல்லை பொறாமை இல்லாதவராய் மேம்பாட்டிலிருந்து நீங்கியவரும் இல்லை.*

நன்றி, வணக்கம்.

*மூலம்: "**திருக்குறள் தெளிவுரை**", டாக்டர்.மு.வரதராசனார், திருத்திய 144ஆவது பதிப்பு நவம்பர் 1998.*